**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**எம்.சி.ஓ.பி. எண். 229/2024**

**ம.சா. 2**

நாள்: 07.02.2026

2026 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 07 ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முருகன் | தொழில் | |
| தந்தை பெயர் | | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலுகா | | | |

முதன்மை விசாரணை:

நான் இம்மனுவில் மனுதாரர் தரப்பு சாட்சியாவேன். எனது முதன்மை விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தயார் செய்து தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் எனது தகவலின் பேரில் தயார் செய்யப்பட்டு அதை நான் படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன்.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து சம்மந்தமாக நான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்தபோது எத்தனை மணி இருக்கும் என்றால் இரவு 07.30 மணி முதல் 08.00 மணி இருக்கும். விபத்து நடந்த இடத்தில் வெளிச்சம் எதுவும் இல்லை என்றாலும், இருட்டாக இருந்தது என்றாலும் சரிதான். விபத்தில் இறந்தவர் எங்கிருந்து எங்கு இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தார் என்றால் நான் டீக்கடையில் டீ குடித்துக்கொண்டிருந்தேன். அவர் என் எதிரில் சென்றார். நான் அவரை 10 அடி துாரத்தில் சென்றேன். நான் அவருக்கு எதிரில்



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.02.07 17:33:24 +0530

இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தேன். விபத்தில் ஈடுபட்ட வாகனம் எனக்கு எதிர்திசையில் வந்தது. எதிர்திசையில் வந்த வாகனம் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்தது. அது சாலையின் இடதுபுறமாக வந்தது. இருசக்கர வாகனம் சாலையின் இடதுபுறமாகத்தான் சென்றது.

இறந்தநபர் தனது இருசக்கர வாகனத்தில் சாலையின் இடது ஓரமாக சென்று கொண்டிருந்து, திடீரென ரோட்டை கடக்க வலதுபுறமாக திரும்பியதால்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. பின்னால் வந்த வாகனத்தை கவனிக்காமல், சாலையை கடக்க முயன்றதால் விபத்திற்கு இறந்துபோன நபர்தான் காரணம் என்றால் சரியல்ல. விபத்தில் இறந்துபோன நபருக்கு தலையில் காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். அவர் தலைக்கவசம் அணிந்து வரவில்லை என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை</u>**

எதிர்திசையில் வந்த வாகனம் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்தது, இறந்துபோன நபர் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்தார். லாரி சாலை விதிகளை பின்பற்றாமல் கிழக்கு திசையில் ஏறி வந்ததால் விபத்து ஏற்பட்டது.

**<u>மறு குறுக்கு விசாரணை</u>**

எனது நிரூபண வாக்குமூலத்தில் இந்த விவரங்களை சொல்லவில்லை என்றால் சரியல்ல.

MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.02.07 17:33:28 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .